

திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில், கடலூர் மாவட்டம், தொழுதூர் அருகே நிகழ்ந்த கோர விபத்தில் காயமடைந்து பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகிய இருவரும் நள்ளிரவு நேரத்தில் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். இதில் ம.பிரபாகரன் எம்.எல்.ஏ., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஷ் பசேரா மற்றும் பலர் உடனிருந்தனர்.



சேலம் கிழக்கு மாவட்டம், வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மனோகரன், சங்கர், சந்திரமோகன், மலர்விழி ராஜா, சோமசுந்தரம், கணேஷ்குமார், தே.மலையரசன் எம்.பி., ஒன்றியச் செயலாளர்கள் மாணிக்கம், வெண்ணிலா சேகர், உமாசங்கர், சதீஷ்குமார், விஜயகுமார், ரத்தினவேல், ராஜேந்திரன், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், சிவராமன், மருதமுத்து, மூர்த்தி, டாக்டர் செழியன், வரதராஜன், சித்தார்த்தன், அழகு வேல், பழனிசாமி, பாலமுருகன், வேல்முருகன், பாலசுப்பிரமணியம், ராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

## கே.எஸ்.மூர்த்தி தலைமையில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

*நாமக்கல், டிச. 26*

100 நாள் வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசைக் கண்டித்து நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எலச்சிபாளையம் ஒன்றியத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே எஸ் மூர்த்தி தலைமையிலும், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.தங்கவேல் செல்வராஜ் ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

அதேபோல் பள்ளிபாளையம் ஒன்றியத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், மாநில விவசாய அணி துணை செயலாளர் வெப்படை ஜி. செல்வராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் எம். ராஜா ராஜன் ஆகியோர் தலைமையிலும் பள்ளிபாளையம் ஒன்றிய செயலாளர்கள் நாச்சிமுத்து, தளபதி செல்வம், இளங்கோவன் ஆகியோர் முன்னிலையிலும் :

கபிலர்மலை ஒன்றியத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ரங்கசாமி, ஜிஜேந்திரன் ஆகியோர் தலைமையிலும், ஒன்றிய கழக செயலாளர்கள் சுப்ரமணியன், சரவணகுமார், சாமிநாதன் ஆகியோர் முன்னிலையிலும் : பரமத்தி ஒன்றியத்தில் மாவட்ட துணை செயலாளர் அன்பழகன் தலைமையிலும் ஒன்றிய கழகச் செயலாளர்கள் தனராசு, லலித்குமார் ஆகியோர் முன்னிலையிலும்,

திருச்செங்கோடு ஒன்றியத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் அ.ரியா, மாவட்ட அவைத் தலைவர் நடன சபாபதி ஆகியோர் தலைமையிலும், ஒன்றிய கழகச் செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், தாமரைச்செல்வன், அருண்குமார் ஆகியோர் முன்னிலையிலும், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் மயில்சாமி, சாந்தி ஆகியோர் தலைமையிலும், ஒன்றிய கழக செயலாளர்கள் பழனிவேல், சுந்தரம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக முன்னோடிகள், இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட 3000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்!

# திருத்துறைப்பூண்டியில் மாபெரும் கபடிப்போட்டி!

## ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் விவேக் ஏற்பாட்டில்!

*திருவாரூர், டிச. 26*

திருத்துறைப்பூண்டி ஒன்றிய இளைஞர் அணி சார்பில் விளக்குடி ஊராட்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் சிறப்பு கபடிப்போட்டி ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.விவேக் ஏற்பாட்டில் சிறப்புடன் 26 மற்றும் 27.12.25 இரு தினங்கள் நடைபெறுகிறது.

திருவாரூர் மாவட்டம் முழுவதும் இளைஞர் அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா நடைபெற்றுவருவதை முன்னிட்டு, திருத்துறைப்பூண்டி ஒன்றிய துணை அமைப்பாளர் வி.விவேக் ஏற்பாட்டில் நடைபெறும் மாபெரும் கபடிப்போட்டிக்கு மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்கிறார்.

மாவட்ட துணைச் செயலாளர் எம்.ராமகிருஷ்ணன் முன்னிலையில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சி.ஆனந்தகுமார், தாட்கோ தலைவர் நா. இளையராஜா, மாவட்ட அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பிலான பரிசுகள் வழங்கப்படும் இந்த விழாவில் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கு.நாகராஜன், எஸ்.அசோகன், எம். என்.ராஜா, ப.ஜாகிர்உசேன், வி.வினோத்குமார், எம்.பி.எடிசன், ஏ.வி. பாலாஜி, ஏ.சீனிவாசன், ஒன்றிய நிர்வாகிகள் சேது முருகானந்தம், அவைத்தலைவர் பாலகிருஸ்ணன், எஸ்.பி.பாஸ்கர், ரவிச்சந்திரன், வீரமணி, தமிழ் ஜோதி, கவிதாநவநீதம், தொகுதி ஒருங்கிணைப்பாளர் வசந்தன் மற்றும் ஒன்றிய இளைஞர்அணி நிர்வாகிகள் கே.ஆர்.வெங்கடேஷ்குமார், என்.கே. வெங்கடேஷ், பரமேஷ், வாத்தியார்கார்த்தி,ஸ்ரீதர், வினோத், ஏ.விஷ்வா உள்ளிட்டநிர்வாகிகள் பங்கேற்றுச்சிறப்பிக்கின்றனர்.

முதல் போட்டியை மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர் பாஸ்கர், எல்.எம்.செல்வம் ஆகியோர் துவக்கி வைக்க, விழா ஏற்பாட்டாளர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி. விவேக் நன்றி கூறுகிறார்.




